ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2021 ஏப்பிறல் 16 |

## ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல்

பொருட்களின் ஏற்றுமதியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளை நாணயச்சபை கருத்திற்கொண்டு, 2021.03.09ஆம் திகதியிடப்பட்ட 2218/38ஆம் இலக்க வர்த்தமானியில் (அதிவிசேடம்) வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க விதி பின்வருவனவற்றை பிரதியிடுவதன் மூலம் திருத்தப்படுகிறது.

(அ) பொருட்களின் ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கை ரூபாவிற்கு மாற்றுவதற்கான கட்டாய தேவைப்பாட்டினை இருபத்தைந்து (25) சதவீதத்திலிருந்து பத்து (10) சதவீதத்திற்கு குறைத்தல், மற்றும்

(ஆ) மேலே (அ) இல் வேண்டப்பட்டதன்படி, பொருட்களின் ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கை ரூபாவிற்கு மாற்றுவதற்கு ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட நாட்களின் எண்ணிக்கையை பதின்னான்கு (14) நாட்களிலிருந்து முப்பது (30) நாட்களிற்கு அதிகரித்தல். ஆயினும், எவ்வாறிருப்பினும், அத்தகைய மாற்றும் திகதி, கப்பலேற்றப்பட்ட திகதியிலிருந்து நூற்றியெண்பது (180) நாட்களுக்குப் பிந்திய திகதியொன்றாக இருத்தலாகாது.

மேலதிக தகவல்களிற்கு, 2021.04.09 திகதியிடப்பட்ட 2222/60ஆம் இலக்க வர்த்தமானியில் (அதிவிசேடம்) வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க விதியினை பார்வையிடவும். (http://www.documents.gov.lk/files/egz/2021/4/2222-60_T.pdf)